12.08.2024



## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.

## அசல் வழக்கு எண்.116/2016

## வா.சா. 1–தியாகராஜன், த/பெ. மாசி நாடார்

### பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

03. தாவா சொத்து காலிமனை என்று சொன்னீர்கள், அது சம்மந்தமாக ஏதேனும் ஆவணங்கள் உள்ளதா என்றால் ஒன்பது ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். அந்த ஒன்பது ஆவணங்களில் தாவா சொத்து சம்மந்தமாக ஆவணங்கள் உள்ளதா என்றால் உள்ளது. தற்போது சாட்சி இல்லை என்று கூறுகிறார். தாவா சொத்து கோவில் சொத்து என்றும், அதை பங்காளிகள் சாமி கும்பிடுவதற்காகவும் இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன். நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரியுள்ளீர்களா என்றால் பக்கத்து நிலத்துக்காரர்கள் கோவில் நிலைத்தை ஆக்கிரமிப்பு செய்யக்கூடாது என்றுதான் கோரியுள்ளேன். தாவா சொத்து குறித்து தனிப்பட்ட உரிமை உங்களுக்கு இல்லை என்றும், அதனால் வழக்கு தாக்கல் செய்ய உரிமையில்லை என்று சொன்னால் சரியல்ல.

04. 1, 2 பிரதிவாதிகளின் வீடு தாவா சொத்திற்கு கிழக்கே உள்ளது என்றால் ஆமாம். கிழக்கு பக்கம் 1, 2 பிரதிவாதிகளுக்கு வீடு உள்ளதால் தாவா சொத்தில்

உள்ள காலிமனையை பிரதிவாதிகள் அனுபவம் செய்வதற்கு உரிமையுள்ளது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்திற்கு மேற்கே 3 ம் பிரதிவாதியின் வீடு உள்ளது என்று சொன்னால் சரிதான். பிரதிவாதிகளுக்கு அண்ட பாத்தியம் உள்ளதால் அவர்கள் அனுபவம் செய்வதற்கு உரிமையுள்ளது என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு அனுபவம் செய்து வருவதை நீங்கள் தடை இடைஞ்சல் செய்ய முடியாது என்று சொன்னால் சரியல்ல. அது கோவில் நிலமாகும். தாவா சொத்தில் மாசிமலையான் என்ற கோவிலுக்குண்டான சிலை அமைப்புகள் இல்லை என்று சொன்னால் மலை மற்றும் மரங்கள் விழுந்து உடைந்துவிட்டது தற்போது இரண்டு வேலும், ஒரு கத்தியும் உள்ளது. தாவா சொத்து வாதிகளுக்கு எந்த வகையிலும் பாத்தியமில்லை என்று சொன்னால் சரியல்ல.

05. பிரதிவாதிகள் அண்டபாத்தியமாக அனுபவம் செய்து வருவதால் அவர்கள் அரசிடம் மனு கொடுத்து அதை அனுபவம் செய்வதற்கு உரிமையுள்ளது என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு உள்ள நிலையில் பிரதிவாதிகளை தடை செய்யமுடியாது என்று சொன்னால் சரியல்ல. வருவாய்துறை ஆவணங்களில் தாவா சொத்து காலிமனை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1936 ம் வருடத்திய கிரையாவணம் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். அந்த

கிரையாவணத்தில் தாவா சொத்து சாணான் இடம் என்று சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அவ்வாறு சாணான் இடம் என்று சொல்லப்பட்டுள்ளது தவறானது என்று சொன்னால் சரியல்ல. அதற்கு பின்னிட்டு ஏற்பட்ட ஆவணங்களில் சாணான் கோவில் என்று குறிப்பிடப்பட்டுள்ளது தவறு என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் நாளது தேதி வரை கோவில் எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

06. தாவா சொத்தில் கோவில் இல்லை என்றும், அந்த வகையில் நீங்கள் எந்த பரிகாரமும் கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல. 2 ம் வாதி என்னுடைய உடன்பிறந்த சகோதரர். தாவா சொத்திற்கு உங்கள் பெயரில் பட்டா கேட்டு வட்டாட்சியர் அலுவலகத்தில், மனு கொடுத்து பட்டா பெற முயற்சி செய்தீர்களா என்றால் இல்லை. 19.11.2015 ம் தேதியில் 3 ம் பிரதிவாதி, தாவா சொத்தை நீங்கள் ஆக்கிரமிப்பு செய்வதாக திருச்சி மாவட்ட ஆட்சியரிடம் புகார் கொடுத்தாரா என்றால் தெரியாது. அந்த மனு சம்மந்தமாக வருவாய்துறையில் விசாரணையில் நிலுவையில் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நீங்கள் தாவா சொத்திற்கு பட்டா கேட்டதால், அதை பிரதிவாதிகள் ஆட்சேபனை செய்வதால் அதை மனதில் வைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

12.08.2024



07. தாவா சொத்து உங்களுடைய சொத்து என்று சொன்னால் நீங்கள் விளம்புகை பரிகாரம் கேட்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. சட்டப்படியான எந்த உரிமையும் உங்களுக்கு தாவா சொத்தை பொறுத்து கிடையாது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து அரசிற்கு பாத்தியப்பட்டது என்பதால் நீங்கள் எந்தவித நிவாரணமும் கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் உங்களுக்கு பாத்தியம் உள்ளது என்று கேட்பதை பிரதிவாதிகள் எதிர்த்து ஆட்சேபனை செய்வதற்கு உரிமையுள்ளது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் நீங்களும், உங்கள் பங்காளிகளும் சேர்ந்து மாசிமலையான் தெய்வத்திற்கு சாமிகும்பிடுவதாக கூறுவது தவறு என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்திற்கு அருகே சர்வே எண்.294/95, 294/93 என்ற சொத்துக்கள் உள்ளதா என்றால் இல்லை. இந்த வழக்கை யூகத்தின் அடிப்படையில் தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் தாவா சொத்திற்கு பட்டா பெற்று அதிக விலைக்கு விற்க முயற்சி செய்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. மேலெழுந்த வாதிகளாக உங்களுக்கு எந்த உரிமையும், சமச்சீர், வழக்குமூலம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

/உண்மை நகல்/
ஒம்/-திரு.இரா. சத்தியமூர்த்தி,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
துறையூர்.